முச்சந்தி முரளி



"இனி பார்லிமென்டிலையும் ஒரே பேஸ்புக் லைவ் தான் கலக்கப்போகுது பாருங்கோ"

Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 354

வெள்ளிக்கிழமை
15 நவம்பர் 2024

ஐப்பசி 29
வள்ளுவர் ஆண்டு 2055

# வடக்கையும் சுருட்டியது திசைகாட்டிப் பேரலை

## மூன்றிலிரண்டு பெரும்பான்மை நிச்சயம்

## யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு மூன்று ஆசனம்

## தமிழரசு,முன்னணி, அருச்சுனாவின் சுயேச்சைக்குழு தலா ஓர் ஆசனம்

யாழ்ப்பாணம், நவம்பர் 15

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் நேற்று நள்ளிரவுமுதல் அறிவிக்கப்பட்டு வருகின்றன. இன்று அதிகாலை கிடைத்த தகவல்களின் படி, ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாணத்தில் மூன்று ஆசனங்களும், தமிழரசுக் கட்சி, தமிழ்க்காங்கிரஸ் மற்றும் மருத்துவர் அருச்சுனா தலைமையிலான சுயேச்சைக்குழு - 17 என்பவற்றுக்கு தலா ஒவ்வொரு ஆசனங்களும் கிடைத்துள்ளதாக தெரியவருகின்றது.

16

## ஹெலிகொப்டரில் வந்த நெடுந்தீவின் வாக்குகள்

யாழ்ப்பாணம், நவ. 15

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு நெடுந்தீவில் பதிவான வாக்குகள் ஹெலிகொப்டர் மூலமாக வாக்கெண்ணும் நிலையத்துக்கு நேற்று மாலை எடுத்து வரப்பட்டது.

16

## எதிர்வரும் ஒருவாரத்துக்கு போராட்டங்களுக்குத் தடை!

கொழும்பு, நவ. 15

இலங்கையில் பொதுத் தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர், அடுத்த ஒரு வாரத்துக்குப் போராட்டங்கள் நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட

16

## நாதம் இழந்தது வீணை

யாழ்ப்பாணம், நவ. 15

கோத்தாபய ராஜபக்சவின் அரசாங்கத்திலும், அதற்கு

16



## தேர்தல் கடமையிலிருந்த பொலிஸ் அதிகாரி சாவு!



யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரியொருவர் நேற்று உயிரிழந்துள்ளார். அராலி, வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த சுபாஷ்

16

## வாக்களிப்பு வீதம் வன்னியில் வீழ்ச்சி

### இம்முறை 65.5 வீதம்

வவுனியா, நவ. 15

வன்னித் தேர்தல் மாவட்டத்தில், கடந்த நாடாளுமன்றத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் இம்முறை வாக்களிப்பு வீதம் மிகையாகக் குறைந்துள்ளது. இதன்படி இம்முறை 65.5 வீதமான வாக்களிப்பே பதிவாகியுள்ளது.

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத்

16

## வாக்குகள் எடுத்துவந்த ஹெலி பழுதடைந்ததால் ஸ்தம்பித்தது!

யாழ்ப்பாணம், நவ. 15

நாடாளுமன்றத் தேர்தலில் நெடுந்தீவில் இருந்து வாக்குகளை எடுத்துவந்த ஹெலி, பழுதடைந்த காரணத்தால் திரும்பிச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

அதன்பின்னர் பலாலியில் இருந்து நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு ஹெலியைத் திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-26)

## வலுவான நாடாளுமன்றமே எனது ஒரே எதிர்பார்ப்பு!

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, நவ. 15

வலுவான நாடாளுமன்றமே எனது எதிர்பார்ப்பு. மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எதிர்பார்க்கவில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மருதானையில் தனது வாக்கைச் செலுத்திய அவர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்த

16

## வாக்களிக்க மக்கள் ஆர்வம் காட்டவில்லை

மஹிந்த தேசப்பிரிய

விரிவு :- பக். 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் - 2024

## நல்லூர் தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 8,831 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 3,527 |
| தமிழரசுக் கட்சி | 3,228 |
| தமிழ்க் காங்கிரஸ் | 2,396 |
| சுயேச்சை - 17 | 2,279 |
| ஐ. தமிழ்த் தேசியக் கூட்டணி | 1,528 |

## ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| ஈ.பி.டி.பி. | 3,296 |
| தமிழரசுக் கட்சி | 2,626 |
| தேசிய மக்கள் சக்தி | 2,116 |
| தமிழ்க் காங்கிரஸ் | 1,000 |
| ஐ. தமிழ்த் தேசியக் கூட்டணி | 624 |
| சுயேச்சை - 17 | 601 |

## யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 9,066 |
| தமிழரசுக் கட்சி | 2,582 |
| தமிழ்க் காங்கிரஸ் | 1,612 |
| ஈ.பி.டி.பி. | 1,361 |
| ஐ. தமிழ்த் தேசியக் கூட்டணி | 1,124 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,076 |
| சுயேச்சை - 17 | 1,067 |

## வட்டுக்கோட்டைத் தொகுதி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 5,850 |
| தமிழ்க் காங்கிரஸ் | 3,729 |
| தமிழரசுக் கட்சி | 3,705 |
| ஐ.த.தே.கூட்டணி | 1,979 |
| சுயேச்சை - 17 | 1,877 |
| ஈ.பி.டி.பி. | 1,549 |

## காங்கேசன்துறை தொகுதி

| | |
|---|---|
| ஈ.பி.டி.பி. | 3,296 |
| தமிழரசுக் கட்சி | 2,626 |
| தேசிய மக்கள் சக்தி | 2,116 |
| தமிழ்க் காங்கிரஸ் | 1,000 |
| ஐ. தமிழ்த் தேசியக் கூட்டணி | 626 |

## பருத்தித்துறைத் தொகுதி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 4,467 |
| தமிழரசுக் கட்சி | 4,022 |
| தமிழ்க் காங்கிரஸ் | 2,625 |
| ஐ. த. தேசியக் கூட்டணி | 1,980 |
| சுயேச்சை - 17 | 1,572 |
| ஈ.பி.டி.பி. | 1,345 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பாதுகாப்புக்காக 90,000 உத்தியோகத்தர்கள்

கொழும்பு, நவ.15

**நேற்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் 90 ஆயிரம் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.**



63 ஆயிரத்து 145 பொலிஸார் நேரடியாகத் தேர்தல் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த 3 ஆயிரத்து 200 உத்தியோகத்தர்களும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டதுடன், முப்படையினரும் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இணைக்கப்பட்டிருந்தனர். அதேவேளை, 12 ஆயிரத்துக்கும் அதிகமான சிவில் பாதுகாப்பு அதிகாரிகளும் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.
3 ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸ் குழுக்கள் நடமாடும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## சுவரொட்டி ஒட்டிய இருவர் கைது

கொழும்பு, நவ.15



தேர்தல் விதிமுறைகளை மீறி அரசியல் கட்சி ஒன்றின் சுவரொட்டிகளை சட்டவிரோதமான முறையில் ஒட்டிய இருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று காலி பொலிஸார் தெரிவித்தனர். காலி கந்தவத்தைப் பகுதியில் சுவரொட்டிகளை ஒட்டிய வேளையில் கண்டவத்தைப் பிரதேசத்தை சேர்ந்த 66 வயது மற்றும் 55 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். நடமாடும் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவர்களைக் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (எ-இ)

## தேர்தல் பணியில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ.15

கொபேகன பிரதேசத்தில் கடமையில் இருந்த வாக்களிப்பு நிலைய ஊழியர் ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
உயிரிழந்தவர் 57 வயதுடையவர் என்றும், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## வாக்காளருக்கு பணம் வழங்கியவர் கைது

கொழும்பு, நவ.15

பொதுத்தேர்தல் வேட்பாளர் ஒருவர் தேர்தல் விதிமுறைகளை மீறி வாக்காளர்களுக்குப் பணம் விநியோகம் செய்துகொண்டிருந்தபோது கற்பிட்டி அல்மனார் முகாமுக்கு அருகில் நேற்றுக் கற்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்த வேட்பாளரிடம் இருந்த 97 ஆயிரத்து 200 ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)




## சமூக ஊடக தேர்தல் விதி மீறல் 1,388 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, நவ.15

தேர்தல் பரப்புரைக் காலம் முடிவடைந்த பின்னர் சமூக ஊடகங்கள் ஊடாக தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டமை தொடர்பில் ஆயிரத்து 388 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
கடந்த 11ஆம் திகதி நள்ளிரவு 12 மணி முதல் 12ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரையிலான காலப்பகுதியில், 747 சமூக ஊடக இணைப்புகள் அகற்றப்பட்டுள்ளன. அதேநேரம் ஒக்ரோபர் மாதம் 11 முதல் இதுவரையில் மொத்தமாக 2 ஆயிரத்து 33 சமூக ஊடகங்கள் தொடர்பான புகார்கள் பெறப்பட்டுள்ளன.
இனம், மதம், ஆளுமை மற்றும் பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் 385 முறைப்பாடுகளும், வெறுப்புப் பேச்சு தொடர்பாக 203 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-இ)

## தேர்தல் கடமை அதிகாரி மாரடைப்பால் மரணம்!

கொழும்பு, நவ.15

கெஸ்பேவ, பொல்ஹேன பகுதியில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்தில், அதிகாரியாக கடமையாற்றிய பெண் ஒருவர் திடீர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார் என கெஸ்பேவ பொலிஸார் தெரிவித்தனர். இந்துருவாகொடவில் வசிக்கும் லியனகே சாமிகா ருவானி லியனகே (வயது-48) என்பவரே உயிரிழந்துள்ளார்.
கொழும்பு அளுத்கடே மேல் நீதிமன்றில் வேலைத்திட்ட உதவி நீதிபதியாக கடமையாற்றும் இப்பெண் நேற்றுமுன்தினம் காலை கெஸ்பேவ பொல்ஹேன மடத்தில் உள்ள வாக்களிப்பு நிலையத்தின் பொறுப்பதிகாரியாக தனது கடமைகளை ஆரம்பித்துள்ளார். நேற்றுமுன்தினம் இரவு 7.40 மணியளவில் ஓர் அறையில் தங்கியிருந்தபோது அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது.
உடனடியாக அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவரை சிகிச்சைக்காக பிலியந்தலை மாவட்ட மருத்துவமனையில் சேர்ப்பித்தபோதும், அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



## ப தினம் தெரியுமோ?

ஒய்யாரக் கொண்டையாம் உள்ளுக்க ஈரும் பேனுமாம் எண்ட கதையாப் போட்டுது நேற்று எலக்சனுக்காக வந்த ஹெலியின்ர நிலைமை. நெடுந்தீவுக்குப் போற வாக்குப் பெட்டியள் குடுத்து வைச்சதுகள். போகேக்க படகுச்சவாரி, வரேக்க ஹெலிச் சவாரி. யாழ்ப்பாணத்தில இருந்து பஸ்ஸில் போய், பிறகு குறிகாட்டுவானில இருந்து படகில ஏறி நெடுந்தீவு போறதெண்டால் எப்பிடியும் நாலைஞ்சு மணித்தியாலம் தேவைப்படும். எலக்சனுக்கு முதல்நாள் காலமையே வாக்குப் பெட்டியளை நெடுந்தீவுக்கு அனுப்பிறதால போக்குவரத்துக்கு நாலைஞ்சு மணித்தியாலம் பிடிச்சாலும் பிரச்சினையில்லை. ஆனால் வாக்களிப்பு முடிஞ்சவுடன எவ்வளவு கெதியா வாக்குப்பெட்டியை யாழ்ப்பாணம் கொண்டு வரவேணுமோ அவ்வளவு கெதியாக் கொண்டுவாறதுதான் எல்லாத்துக்கும் நல்லது. அதாலதான் நெடுந்தீவுக்கு மட்டும் வாக்குப் பெட்டியளை படகில அனுப்பி, ஹெலியில கொண்டு வாறவை.

இந்தமுறையும் அப்பிடித்தான் நெடுந்தீவில இருந்து வாக்குப்பெட்டியளைக் கொண்டந்தவை. ஆனால் சென்ரல் கொலிஜ்ஜில வாக்குப் பெட்டியை இறக்கிப் போட்டு, ஹெலி வெளிக்கிட ஸ்ரார்ட் பண்ணினால், அது அசையவேயில்லை. அப்பிடியே பிடிச்சுவைச்ச பிள்ளையார் மாதிரி ஆடாமல் அசையாமல் நிக்குதே தவிர ஸ்ரார்ட் வாற சிலமனே இல்லை. பிறகு பலாலியில இருந்தெல்லாம் விமானப்படை மெக்கானிக்மார் வந்து பார்த்து, ஹெலியின்ர பற்றரியில தான் சிக்கல் எண்டு அதைத் திருத்திறதுக்கு நேற்று இரவிரவா படாதபாடுபட்டும் ஹெலி ஸ்ரார்ட் பண்ணேலை. பெட்டியைக் கொண்டந்த பிறகு பழுதானதால எலக்சனுக்கு சிக்கல் இல்லை. ஆனால் இதுவே நெடுந்தீவில இருந்து வெளிக்கிடேக்கை ஹெலி இதை மாதிரி விளையாட்டுக்காட்டியிருந்தால், எல்லாமே கோவிந்தாவாப் போயிருக்கும். ஏனெண்டால் பின்னேரத்தில கடலடி கூடவா இருக்கும். அலையளின்ர ஆட்டத்துக்கு படகில வாறது பயங்கரம். அதால வாக்குப்பெட்டியை படகில கொண்டுவாறது கடும் கஷ்டமா இருந்திருக்கும். வேற வாகனங்கள் எண்டாலும் பற்றரி கையை விட்டால் தள்ளியெண்டாலும் ஸ்ரார்ட் பண்ணியிருக்கலாம். ஆனால் ஹெலி பழுதெண்டால் என்னத்தைச் செய்ய?

இனிமேலாவது இப்பிடியான அவசியமான வேலையளுக்கு அனுப்பிற ஹெலியளை முதலே ஒருக்கா செக் பண்ணி அனுப்பிறது நல்லது. இந்த முறை ஹெலி பழுதாப்போனதால இனிமேல் நெடுந்தீவில வாக்குப்பெட்டியோட ஹெலியில ஏறுறவைக்கு 'ஒருவேளை இது பறந்துகொண்டிருக்கேக்க பழுதாப் போனால்..?' எண்ட நெஞ்சிடி யாழ்ப்பாணத்தில வந்து இறங்கும்வரை இருக்குமெல்லோ.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில் சரஸ்வதி சிலை கல்லூரி முதல்வர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது. கல்லூரியின் பழைய மாணவரான அமெரிக்காவில் வசிக்கின்ற ரவியின் நிதியுதவியில் இந்தச் சிலை அமைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி-13)

# இயமசங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், நவ.15
நல்லூர் சிவன்கோவிலில் இன்று வெள்ளிக்கிழமை இயமசங்கார உற்சவம் நடைபெறவுள்ளது. பி.ப. 3மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி பி.ப. 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து இயமசங்கார உற்சவமும் நடைபெறவுள்ளது. (எ-ரி-17)

# பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.15
யாழ். வதிரி இருதயக் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு அதிபர் கதிர்காமத்தம்பி சிறீஸ்குமார் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவரும், பொறியியலாளருமான தவரட்ணராஜா ஜோன் ஜெயந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (எ-ரி-66)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ.15
கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்படும் மனைப்பொருளியல் டிப்ளோமா தரச் சான்றிதழ் கற்கைநெறிக்கு பயிலுநர்களை தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
யாழ். பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் க.பொ.த. சாதாரண தரம் படித்த 18-35 வயதுடையோர் யாழ். பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்று யாழ். பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (எ-ரி-10)



# யாழில் மரக்கறிகளின் விலைகளில் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ.15
யாழ். குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலை திடீரென சரிந்துள்ளது. கடந்த வாரத்தில் அதிகரித்திருந்த மரக்கறி வகைகளின் விலை தற்போது திடீரென வீழ்ச்சியுற்றுக் காணப்படுகின்றது.
திருநெல்வேலி சந்தையில் மரக்கறி விலை நிலவரப்படி கத்தரிக்காய் கிலோ 150 ரூபாவாகவும், பயிற்றங்காய் கிலோ 180 ரூபாவாகவும், பூசணிக்காய் கிலோ 80 ரூபாவாகவும், மரவள்ளிக் கிழங்கு 180 ரூபாவாகவும், தக்காளிப்பழம் கிலோ 250ரூபாவாகவும், பச்சைமிளகாய் கிலோ 200 ரூபாவாகவும், பாகற்காய் கிலோ 300 ரூபாவாகவும், கீரை 1 பிடி 150 ரூபாவாகவும் காணப்படுகின்றது. (எ-ரி-17)

# கைதி தப்பியோட்டம்

கொழும்பு, நவ.15
காலி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவ தப்பிச் சென்றுள்ளார் என்று காலி பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. காலி, அக்மீமன பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே தப்பிச் சென்றுள்ளார். இந்தக் கைதி சிறைச்சாலையின் சமையல் அறையில் உணவுகளைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் காலி பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், போதுமான பணம் கையில் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். தாய்வழி உறவினர்கள் வகையில் சுபச் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அரசாங்கக் காரியங்கள் சற்று இழுபறிக்குப் பிறகே முடியும். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். அவர்களுக்காக செலவு செய்ய நேரிடும்.

**கடகம்:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சி சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேற்றுமை [illegible]கி அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் [illegible]டல் நலனில் கவனம் தேவை.

**சிம்மம் :** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. தாயின் ஆலோசனைப்படி செயற்படுவது நன்மை தரும். இன்று கிடைக்கும் என்று எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும்.

**கன்னி:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு உறவினர்களால் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**துலாம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சி எடுப்பதற்கு உகந்த நாள். எதிரிகள் வகையில் ஏற்பட்ட பிரச்சினைகள் மறையும். குடும்பம் தொடர்பாக எடுக்கும் முக்கியமான முடிவு சாதகமாக முடியும்.

**விருச்சிகம் :** இன்று எதிலும் பொறுமை அவசியம். சகோதரர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**தனுசு:** இன்று வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். புதிதாகத் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணை வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும். தேவையான பணம் கையில் இருந்தாலும் தேவையற்ற செலவுகள் ஏற்படுவதால் மனதில் சஞ்சலம் ஏற்படக்கூடும்.

**மீனம்:** முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையால் சில செலவுகள் ஏற்படக்கூடும்.

# மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

அநுராதபுரம், மதவாச்சிப் பிரதேசத்தில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று மதவாச்சிப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது. 47 வயதுடைய ஒருவரே உயிரிழந்தவராவார்.
வயலில் வேலை செய்துகொண்டிருந்தபோது இவர் மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளார். படுகாயமடைந்த நிலையில் மதவாச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இவர் பின்னர் உயிரிழந்துள்ளார். (எ-இ)

# பொருள்கள் கையளிப்பு

சாவகச்சேரி, நவ. 15
சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில் 20 இலட்சம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் உள்ளிட்ட பொருள்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை கையளிக்கப்பட்டன. (எ-ரி-9)

# குளவிக்கொட்டுக்கு இலக்காகி 17 சிறுவர்கள் சிகிச்சையில்

கொழும்பு, நவ.15
அநுராதபுரம், தலாவ, ஹெலம்பவெவ பிரதேசத்தில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி 17 முன்பள்ளிச் சிறுவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தலாவ பொலிஸார் தெரிவித்தனர். 3 முதல் 4 வயதுக்குட்பட்ட சிறுவர்களே குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். முன்பள்ளி பாடசாலையின் தோட்டத்தில் உள்ள மாமரத்திலிருந்த குளவிக்கூடு ஒன்று கலைந்ததால் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. தலாவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறுவர்களில் மூவர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மாற்றமெனும் சுனாமிக்குள் தமிழினம்

இலங்கையின் 10 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்து முடிவுகளும் வெளியாகியிருக்கின்றன. ஜனாதிபதித் தேர்தலில் அடித்து ஓய்ந்த மாற்றத்துக்கான அலை, இம்முறை சுனாமியாக மாறி நாடாளுமன்றத் தேர்தலிலும் எதிரொலித்திருக்கின்றது. இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான் என்கின்றபோதும், தமிழர்களின் தாயகமான வடக்கு – கிழக்கில் ஆபத்தான மாற்றத்தை இந்தத் தேர்தல் ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பின்தள்ளி தெற்குத் தேசியக் கட்சி ஒன்று வடக்கு - கிழக்கில் காலூன்றி இருப்பது நிச்சயம் தமிழ் மக்களுக்கு ஆரோக்கியமானதாக இருக்கப்போவதில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பலம் பொருந்திய கட்டமைப்பாக உருவாக்கப்பட்டிருந்தது. தமிழ் மக்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமிழ் மக்களின் ஒரே நம்பிக்கையாகவும் இருந்தது. கட்சிகளிடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டியும், தமிழ் அரசியல் தலைமைகளிடையே உருவான பதவிப் போட்டியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதறடித்தன. தமிழ் அரசியல் தலைமைகளிடையே ஒற்றுமையின் தேவையை பல தடவைகள் - பல தரப்புகள் சுட்டிக்காட்டியபோதும் - வலியுறுத்தியபோதும் அவை அதையெல்லாம் கணக்கில் எடுக்காது செய்த கட்சி அரசியலும் - பதவிப் போட்டிகளும் தமிழ் மக்களுக்கான அரசியல் இருப்பை இப்போது கேள்விக் குறியாக்கியுள்ளன என்பதை எவரும் மறுக்கமுடியாது. தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்குள் அடித்துக்கொண்டு - சேறுபூசிக் கொண்டு செய்த இரண்டாம் தர அரசியல், அவர்களை மக்களிடம் இருந்து அந்நியப்படுத்தியது. தமிழ்த் தேசியக் கட்சிகளும் - தமிழ் அரசியல் தலைமைகளும் தங்கள் முன்னிருந்த மிகப் பெரும் பொறுப்பை உணர மறுத்து - உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு சிறுபான்மை இனத்தின் பிரதிநிதிகள் என்பதை மறந்ததன் விளைவு இப்போது அறுவடையாக ஆரம்பித்திருக்கின்றது. இப்போது தமிழர் தாயகப் பிரதேசங்களில் ஏற்பட்டிருக்கும் ஆபத்தான மாற்றத்துக்கு காரணகர்த்தாக்கள் தாங்களே என்பதை இப்போதாவது தமிழ் அரசியல் தலைமைகள் புரிந்துகொள்ளவேண்டும்.

மக்களுக்கான அரசியலைச் செய்யாது கட்சி அரசியலிலும், பதவிப் போட்டிகளிலும் தமிழ் அரசியல் கட்சிகள் மூழ்கி ஒருவர் மீது ஒருவர் சேறுபூசிக் கொண்டதன் விளைவும், ஒவ்வொருவரும் தனித்தனிக் கட்சிகளாகவும், சுயேச்சைகளாகவும் களம் கண்டதாலும் நாடாளுமன்றத் தேர்தல் தினத்தில் கூட தாங்கள் யாருக்கு வாக்களிப்பது என்பதைத் தீர்மானிக்க முடியாத ஒரு நிலைமை சாதாரண தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருந்தது. மக்கள் மத்தியில் இருந்த இந்தக் குழப்பத்தைச் சீராக்க தமிழ்த் தேசியக் கட்சிகள் எவையுமே சிரத்தை எடுக்காதிருந்தநிலையில், இடையே புகுந்து வாக்கு அறுவடையை நடத்தியிருக்கின்றது தெற்குத் தேசியக் கட்சியொன்று. அதைவிடவும், புதிய வாக்காளர்களிடம் கடந்த கால வரலாற்றை ஊடுகடத்தத் தமிழ்த் தேசியத் தலைமைகள் தவறியதும் இம்முறை தேர்தலில் பெரும் பாதகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கும், பல்லாண்டுகாலமாக அனுபவித்து வரும் அடக்குமுறைகளைத் தீர்ப்பதற்கும் தமிழ் மக்களின் அரசியல் பலம் இன்றியமையாதது. ஓரளவுக்கேனும் திருப்திகொள்ளத்தக்க தீர்வுகளைத் தெற்கிடம் இருந்து பெற்றுக்கொள்ளவேண்டுமானால், தமிழர்கள் அரசியல் ரீதியாகப் பலமாக இருப்பது மட்டுமே சாத்தியம். கடந்தகாலங்களில் தெற்கு பௌத்த மேலாதிக்கச் சிந்தனை மேவிப் பாய்ந்தோடாது இருந்தமைக்கு அதுவே காரணமாகவும் இருந்தது. ஆனால் இப்போது தமிழ் மக்களின் அரசியல் பலமும் தெற்கிடம் தாரை வார்க்கப்பட்டிருக்கின்றது. இந்தநிலைமைக்கு மக்கள் மீது குற்றஞ்சாட்டித் தமிழ்த் தலைமைகள் தப்பிவிட முடியாது. தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளினதும் - அரசியல் தலைமைகளினதும் தூரநோக்கற்ற - குறுகிய சிந்தனையே இவற்றுக்கெல்லாம் மூல காரணம். அதை ஏற்றுக்கொண்டு இனிவரும் காலங்களிலாவது தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தித் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபடவேண்டும். இல்லாவிட்டால் அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்த் தேசிய அரசியல் முற்றாகத் துடைத்தெறியப்படுவதைத் தவிர்க்கமுடியாது என்பது வேதனையான நிதர்சனம்.



# சர்வதேச நாணயநிதியக் குழுவின் இலங்கைப் பயணம் ஒத்திவைப்பு

**கொழும்பு, நவ.15**

**இலங்கைக்கு வரவிருந்த சர்வதேச நாணயநிதியத்தின் உயர்மட்டக் குழுவின் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்று இந்தக் குழு இலங்கைக்கு வரவிருந்தது என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே, அந்தக் குழுவின் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று நாட்டில் பொதுத்தேர்தல் நடைபெற்றதால், அந்தக் குழு தனது பயணத்தை நாளைவரை ஒத்திவைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையின் நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் மூன்றாவது மீளாய்வை மேற்கொள்ளவே இந்தக் குழு இலங்கை வரவிருந்தது. (எ-இ)

# அனர்த்தங்களை அறிவிக்க தொலைபேசி இலக்கங்கள்

கொழும்பு, நவ.15

நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் இடம்பெறும் அனர்த்தங்கள் தொடர்பாக அறிவிப்பதற்கு விசேட தொலைபேசி இலக்கங்கள் இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளன. 0702117117, 0113668032, 0113668087, 0113668025, 0113668026, 0113668019 ஆகிய தொலைபேசி இலக்கங்களே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த விசேட வேலைத்திட்டம் நாளை வரை தொடரும் என்றும், வளிமண்டலவியல் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் முப்படையினர் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-66)

# ரயில் சேவைகள் நிறுத்தம்

கொழும்பு, நவ.15

ரயில் சாரதிகள் மற்றும் உதவியாளர்கள் பணிக்கு வராததால் நேற்று 10 ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. ரயில் சாரதிகள் மற்றும் நடத்துநர்களைப் பணிக்கமர்தாத காரணத்தால் ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது (எ-இ)

# இலத்திரனியல் முறையில் பிறப்பு, இறப்புச் சான்றிதழ்

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களின் நன்மை கருதி இலத்திரனியல் பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களை வழங்குவதற்கு ஆட்பதிவுத்திணைக்களம் தீர்மானித்துள்ளது.

முதல் கட்டமாக குவைத், ஜப்பான், கட்டார் ஆகிய நாடுகளிலுள்ள தூதரகங்கள் ஊடாகவும் ரொறன்ரோ, மெல்பேர்ண், மிலான் ஆகிய நகரங்களிலுள்ள துணைத் தூதரகங்கள் ஊடாகவும் இலத்திரனியல் சான்றிதழ்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1960ம் ஆண்டு வரையான சான்றிதழ்களை இந்த தூதரகங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம் என ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-6)



# இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, நவ.15

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இடியுடன் கூடிய மழை கிடைக்கும் சாத்தியம் உள்ளது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. (எ-இ)

## நாளை

16.11.2024

சனிக்கிழமை - கார்த்திகை - 01

சுபநேரம் : 03.07 - 04.37

ராகுகாலம் : 09.07 - 10.37

## நாளொரு நல்வார்த்தை

**"ஒரு மரத்தை நடவு செய்வது பிரபஞ்சத்தின் லயத்துடன் உங்களை இணைத்துக் கொள்வதற்கான எளிதான வழியாகும்"**

- அமிற் றே-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் - 2024

## வவுனியாத் தொகுதி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 19,786 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 10,736 |
| இலங்கைத் தொழிலாளர் கட்சி | 8,354 |
| ஜனநாயக தேசிய கூட்டணி | 6,556 |
| ஐ.த.தே.கூட்டணி | 5,886 |

## மானிப்பாய்த் தொகுதி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 10,059 |
| தமிழரசுக் கட்சி | 4,386 |
| ஐ. தமிழ்த் தேசியக் கூட்டணி | 3,443 |
| தமிழ்க் காங்கிரஸ் | 2,751 |
| சுயேச்சை - 17 | 2,413 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,892 |

## உடுப்பிட்டித் தொகுதி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 4,006 |
| தமிழரசுக் கட்சி | 2,994 |
| தமிழ்க் காங்கிரஸ் | 2,423 |
| ஐ.தேசிய முன்னணி | 2,447 |
| சுயேச்சை - 17 | 1,801 |
| ஐ. தமிழ்த் தேசியக் கூட்டணி | 1,400 |

## சாவகச்சேரி தொகுதி

| | |
|---|---|
| சுயேச்சை - 17 | 5,978 |
| தேசிய மக்கள் சக்தி | 4,901 |
| தமிழரசுக் கட்சி | 4,600 |
| தமிழ்க் காங்கிரஸ் | 2,596 |
| ஐ.த.தே.கூட்டணி | 2,086 |

## கிளிநொச்சி மாவட்டம்

| | |
|---|---|
| தமிழரசுக் கட்சி | 23,293 |
| தேசிய மக்கள் சக்தி | 8,717 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 8,554 |
| சுயேச்சை - 17 | 2,098 |
| ஈ.பி.டி.பி. | 1,497 |



## சேருவில தொகுதி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 27,702 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 9,581 |
| தமிழரசுக் கட்சி | 5,543 |
| பெரமுன | 812 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் 2024



## பதுளை மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 275,180 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 102,958 |
| புதிய ஜனநாயக முன்னணி | 36,450 |
| பொதுஜன பெரமுன | 11,255 |

## பொலநறுவை மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 159,010 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 43,822 |
| சர்வஜன பலய | 8,587 |
| புதிய ஜனநாயக முன்னணி | 5,153 |

## கேகாலை மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 49,925 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 11,802 |
| புதிய ஜனநாயக முன்னணி | 3,195 |
| பொதுஜன பெரமுன | 1,855 |

## மாத்தளை மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 117,472 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 39,879 |
| புதிய ஜனநாயக முன்னணி | 8,640 |
| பொதுஜன பெரமுன | 7,248 |

## நுவரெலியா மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 38,160 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 16,474 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 10,431 |

## இரத்தினபுரி மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 155,864 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 49,376 |
| பொதுஜன பெரமுன | 14,340 |
| புதிய ஜனநாயக முன்னணி | 12,402 |

## திருகோணமலை மாவட்டம்

(தொகுதி)

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 87,031 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 53,058 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 34,168 |
| புதிய ஜனநாயக முன்னணி | 9,387 |

## கண்டி மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 109,665 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 21,797 |
| புதிய ஜனநாயக முன்னணி | 6,611 |
| பொதுஜன பெரமுன | 2,939 |

## புத்தளம் மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 11,404 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,661 |
| புதிய ஜனநாயக முன்னணி | 672 |
| பொதுஜன பெரமுன | 454 |

## மொனராகலை மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 100,426 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 35,517 |
| புதிய ஜனநாயக முன்னணி | 8,481 |
| பொதுஜன பெரமுன | 6,540 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் 2024



## காலி மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 406,428 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 93,486 |
| பொதுஜன பெரமுன | 31,201 |
| புதிய ஜனநாயக முன்னணி | 30,453 |

## திகாமடுல்ல மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 17,316 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,272 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 1,899 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1,599 |

## குருனாகலை மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 61,847 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 7,734 |
| புதிய ஜனநாயக முன்னணி | 2,437 |
| பொதுஜன பெரமுன | 1,977 |

## களுத்துறை மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 217,819 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 47,623 |
| புதிய ஜனநாயக முன்னணி | 14,296 |
| பொதுஜன பெரமுன | 10,378 |

## திருகோணமலை மாவட்டம்

(தபால் மூலம்)

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 9,705 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,853 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 1,749 |
| புதிய ஜனநாயக முன்னணி | 382 |

## கொழும்பு மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 28,475 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 2,985 |
| புதிய ஜனநாயக முன்னணி | 1,814 |
| பொதுஜன பெரமுன | 934 |

## அநுராதபுரம் மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 140,418 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 44,684 |
| புதிய ஜனநாயக முன்னணி | 12,359 |
| பொதுஜன பெரமுன | 4,480 |

## மட்டக்களப்பு மாவட்டம்

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 5,236 |
| தேசிய மக்கள் சக்தி | 3,412 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 1,383 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1,019 |

## அம்பாந்தோட்டை மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 234,083 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 52,170 |
| புதிய ஜனநாயக முன்னணி | 26,268 |
| பொதுஜன பெரமுன | 18,297 |

## மாத்தறை மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 317,541 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 74,475 |
| புதிய ஜனநாயக முன்னணி | 31,009 |
| சர்வஜன பலயன | 11,776 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சீரமைப்பின்றி கட்டுடை வீதி

யாழ்ப்பாணம், நவ. 15

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட ஜே/140 கிராமசேவகர் பிரிவில் மானிப்பாய் மேற்கு கட்டுடைச் சந்தியிலிருந்து நவாலி நோக்கிப் பயணிக்கும் சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமான வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான இந்த வீதியின் பின் அரைவாசிப் பகுதி புனரமைக்கப்பட்டும், முக்கியமான முன் அரைவாசிப் பகுதி புனரமைக்கப்படாமலும் காணப்படுகிறது. வீதியின் முன்பகுதியில் பாடசாலைகள், கிராம சேவகர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோரின் அலுவலகங்கள் இயங்குவதுடன் சண்டிலிப்பாய் விவசாய சம்மேளன காரியாலயத்துக்குச் செல்லும் வீதியாகவும் அமைந்துள்ளது.

மழைகாலங்களில் இவ் வீதியில் அதிகளவு வெள்ளநீர் தேங்கி நிற்பதால் வீதியால் பயணிக்கும் வாகனங்கள் மூலம் வீதியால் பயணிப்போர் மீது சேற்றுநீர் அடிக்கப்படும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதாகவும், வீதி வளைவுகளில் குழிகள் காணப்படுவதால் வீதியால் பயணிக்கும் வாகனச் சாரதிகள் தமது வாகனங்களைக் குழிகளில் விழுந்து சேதமடையாது பயணிக்க முனையும்போது எதிர்ப் பகுதிகளில் வரும் வாகனங்களுடன் விபத்துகள் இடம்பெறும் சந்தர்ப்பங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளதாகவும் மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ம-66)

இலங்கைக்கு

# பயண எச்சரிக்கையை நீடித்தது அவுஸ்திரேலியா

கொழும்பு, நவ. 15

**இலங்கைக்கான பயண எச்சரிக்கையை நீடிப்பதாகவும், பயண எச்சரிக்கையைத் தளர்த்தும் எண்ணம் தற்போது இல்லை என்றும் அவுஸ்திரேலியா அரசாங்கம் அறிவித்துள்ளது.**

மட்டக்களப்பு, அறுகம்குடா பகுதியில் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்றும், இஸ்ரேலியர்களை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் முன்னெடுக்கப்படச் சாத்தியம் உள்ளதாகவும் அமெரிக்கா எச்சரித்திருந்தது. இதையடுத்து, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் இலங்கைக்குப் பயண எச்சரிக்கைகளை விடுத்தன.

அமெரிக்காவும், இஸ்ரேலும் இலங்கை மீதான பயண எச்சரிக்கையை நீக்கியுள்ள நிலையில், அவுஸ்திரேலியா அரசாங்கம் இலங்கை மீதான பயண எச்சரிக்கையை நீடிப்பதாக அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் நடைபெற்று வரும் போர் காரணமாக இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் எனவும், அவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டால் அவுஸ்திரேலியர்களும் பாதிக்கப்படலாம் என்றும் அவுஸ்திரேலியா அரசாங்கம் அறிவித்துள்ளது. (ம-6)



# உரும்பிராயில் விபத்து; ஒருவருக்குக் காயம்!

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணம் - உரும்பிராயில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உரும்பிராய் காளி கோவிலுக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. வீதியால் சென்ற பெண்ணை மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதையடுத்தே விபத்து சம்பவித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்த பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-20)

# பஸ் விபத்தில் மூவர் இறப்பு!

மாத்தளை, லக்கல எலவாகந்த பிரதேசத்தில் நேற்று மாலை பஸ் ஒன்றும் சிறிய ரக வாகனமொன்றும் விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

வில்கமுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தம்புள்ளை மஹியங்கனை வீதியின் எலவாகந்த பிரதேசத்தில் தம்புள்ளையிலிருந்து மஹியங்கனை நோக்கி பயணித்த பேருந்து எதிர்திசையில் இருந்து வந்த வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போதே மூவர் உயிரிழந்துள்ளனர். 30 பேர் காயமடைந்துள்ளனர். (ம)

# றெட்பானா சந்தியில் சங்கிலி அறுப்பு

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட றெட்பானா சந்தியில் பெண்ணொருவரிடம் இருந்து சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது.

பெண்ணொருவர் மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது பின்தொடர்ந்து வந்த கொள்ளையர்கள் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியோடியுள்ளனர். இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-19)


# மரண அறிவித்தல்

பிறப்பு
18 . 12 . 1928

இறப்பு
04 . 11 . 2024



## சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம்

(Gnanam's)

Founder of Gnanam's Studio and Hotel Ganam's – Jaffna

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அவுஸ்ரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்கள் கடந்த 04.11.2024 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறேஸ் ஞானப்பிரகாசம் அவர்களின் அன்புக் கணவரும், சாம்சன்றோய், கலாஜோதி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசீலன், இந்துமதி, ஆகியோரின் அன்பு மாமனாரும், ரைரோன், ஷிரானி, ஜொனதன், காலஞ்சென்ற சாமந்தி மற்றும் பிந்து ஆகியோரின் அன்புப் பேரனும், நவீனா, திரான், சூர்யா, கதிரவன், ஜோவன்னி, எவானி, பிரண்டன், சியன்னா, சனாயா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (16.11.2024) சனிக்கிழமை நல்லடக்கத்திற்காக அவுஸ்ரேலியாவில் உள்ள Boyd Chapel Second Ave, Springvale VIC 3171 Australia என்னும் இடத்தில் நல்லடக்கம் செய்யப்படும். அந்நாளில் (16.11.2024) யாழ்ப்பாணம் பண்டியந்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பார்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

(cs1833) (N-1)

தகவல்: குடும்பத்தினர்


# திஸ்ஸ விகாரைக்கு எதிராக பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்



யாழ்ப்பாணம், நவ. 15

தையிட்டிப் பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராக பொதுமக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்மானங்களில் இலங்கையர்கள் பெயில்!



கொழும்பு, நவ. 15
இலங்கையர்கள் இன்னமும் சரியான அரசியல் தீர்மானங்களை எடுக்க முடியாதவர்களாக உள்ளனர் என்று முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிப் போரை முன்னெடுத்த பொன்சேகா, அதன் பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கி மஹிந்த ராஜபக்சவிடம் படுதோல்வி அடைந்தார். இறுதியாக இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோதிலும், அவரால் ஒட்டுமொத்தமாக 5 லட்சம் வாக்குகளைக்கூட பெறமுடியவில்லை. இதையடுத்தே, இலங்கையர் தவறான அரசியல் தீர்மானங்களை மேற்கொள்கின்றனர் என்று பொன்சேகா சாடியுள்ளார்.

தேர்தல் காலங்களில் தோற்றுவிக்கப்படும் போலியான அலையின் பின்னால் செல்வதால் மக்களால் சரியான தீர்மானங்களை எடுக்கமுடியாதுள்ளது. இவ்வாறான தீர்மானங்களால் ஒருபோதும் நாட்டைக் கட்டியெழுப்பமுடியாது. அரசியலில் சந்தித்த இழப்புகள் எனக்கு கவலையளிக்கவில்லை. ஆனால் மக்களால் இன்னும் சரியான தீர்மானங்களை எடுக்க முடியவில்லை என்பதே கவலையளிக்கின்றது என்று சரத் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (ம-இ)

# ஆளும் கட்சிக்கு மட்டுமல்ல எதிர்க்கட்சிக்கும் புதியோர்!



## பிரதமர் ஹரிணி விருப்பம்

கொழும்பு, நவ. 15
ஆளும் கட்சியில் புதியவர்கள் அமர்ந்தால் மட்டும் போதாது, எதிர்க்கட்சிக்கும் மக்கள் புதியோரைத் தெரிவுசெய்வது அவசியம் என்று பிரதமர் ஹரிணி தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலில் நேற்று வாக்களித்த பின்னர் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உண்மையான அரசியல் மாற்றம் எனப்படுவது ஆளும் தரப்புக்கு புதியவர்களைத் தெரிவுசெய்வதில் மட்டும் தங்கியிருப்பதில்லை. மாறாக எதிர்க் கட்சிக்கும் புதியவர்களைத் தெரிவுசெய்வதே சிறந்த மற்றும் பலமான எதிர்க்கட்சி இருப்பது நாட்டுக்கு நன்மை பயக்கும். எமக்குப் பதவி முக்கியமல்ல. பலமான நாடாளுமன்றத்தை அமைப்பதையே எதிர்பார்த்துள்ளோம். பெரும்பான்மை பலம் எமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை முழுமையாக உள்ளது. பதவிகள் தொடர்பில் எமது அணிக்குள் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது.

10ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை கூடும். ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் முன்வைத்த கொள்கைத் திட்டத்தை சிறந்த முறையில் செயற்படுத்துவோம். உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கமைய உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

புதியவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புமாறு நாங்கள் குறிப்பிடும்போது எதிர்த்தரப்பினர் பழையவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். பழையவர்கள் நாட்டுக்கு என்ன செய்தார்கள் என்பதை ஆராயவேண்டும் - என்றார். (ம)

# வவுனியாவில் சட்டவிரோதப் பரப்புரைகள்

வவுனியா, நவ. 15
நாடாளுமன்றத் தேர்தல் நேற்று நடைபெற்ற நிலையில், வவுனியாவில் வேட்பாளர்களின் பரப்புரை அட்டைகள் சட்டவிரோதமாக வீசப்பட்டிருந்தன. இரு தினங்களுக்கு முன்னர் பரப்புரைகள் அனைத்தும் முடிவுக்கு வந்த நிலையில், சட்டத்துக்குப் புறம்பான பரப்புரை நடவடிக்கைகளாக இவ்வாறு வேட்பாளர்களின் பரப்புரை அட்டைகள் வீசப்பட்டிருந்தன. அவை பொலிஸாரால் துரிதமாக அகற்றப்பட்டன. (ம-110)

# தேர்தல் விதிமீறல்; 41 பேர் கைதாகினர்

## அவர்களில் இருவர் வேட்பாளர்கள்

கொழும்பு, நவ. 15
தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 41 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகபொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவதெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தேர்தல் அமைதியான முறையில் இடம் பெற்றாலும் தேர்தல் முறைகேட்டில் ஈடுபட்ட 41 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட வேட்பாளர்கள் இருவரும் கற்பிட்டி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

சட்டவிரோதமாக தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடல், தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுதல், வாக்குச் சீட்டுகளை புகைப்படம் எடுத்தல் மற்றும் வன்முறை செயல்களில் ஈடுபடல் ஆகிய குற்றங்கள் தொடர்பிலேயே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் - என்றார். (ம)

# மன்னாரில் 74 வீத வாக்குப் பதிவு

மன்னார், நவ. 15
பொதுத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் 74 வீதமான வாக்குகள் பதிவாகியுள்ளதாக மன்னார் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரான க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் 63 ஆயிரத்து 307 பேர் வாக்களித்துள்ளனர். தபால் மூல வாக்களிப்பையும் உள்ளடக்கினால் 67 ஆயிரத்து 433 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர். இது மொத்த வாக்காளர்களில் 74 வீதமாக காணப்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-56-60)

# யாழ்ப்பாணம் போதனாவில் குருதிக்குத் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் தற்போது 'ஓ பொசிட்டிவ்' குருதி வகைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்த வகைக் குருதியை உடையவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கிக்கு நேரடியாக வருகைதந்து குருதிக்கொடை வழங்கி உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவினர் கேட்டுள்ளனர். (ம-66)



# வாக்குச் சாவடிக்குள் கோடரி: வேடுவருக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, நவ. 15
தம்பனை வேடுவ சமூகத்தின் பிரதித் தலைவரும் குடும்பத்தினரும் வாக்களிப்பு நிலையத்துக்குள் கோடரியுடன் வந்ததால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

தம்பனையில் உள்ள வேடுவசமூகத்தின் பிரதித்தலைவர் கன்பண்டிய எத்தோவும் அவரது குடும்பத்தினரும் தேர்தல் வாக்களிப்பு நிலையத்துக்குள் கோடரியுடன் நுழைந்துள்ளனர். எனினும் அவரது தோளில் கோடரியை அவதானித்த அதிகாரிகள் அவருக்கு அனுமதி மறுத்துள்ளனர். இது குறித்து தம்பனை வேடுவ சமூகத்தின் பிரதித் தலைவர் தெரிவித்ததாவது:-

"வேடுவ சமூகத்தின் கலாசாரம் மற்றும் உரிமைகள் பற்றி அறியாத அதிகாரிகளை அரசாங்கம் தம்பனையில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தக்கூடாது. வெளிநாடுகளுக்கும் நீதிமன்றங்களுக்கும் கோடரியுடன் செல்வதற்கு எங்களிற்கு அனுமதி வழங்கியுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களுக்குள் செல்வதற்கு எந்தத் தடையும் இருக்கக்கூடாது - என்றார். (ம)



# யார் ஆட்சி அமைத்தாலும் இணைந்து செயற்படவேண்டும்

## சஜித் வலியுறுத்து

கொழும்பு, நவ. 15
இலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தாலும், நாட்டைப் பொருளாதாரப் பின்னடைவில் இருந்து மீட்டெடுக்கும் வகையில் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்று முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தனது வாக்கைச் செலுத்திய பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே, அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் சஜித் கருத்து வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுத்தேர்தல் ஜனநாயகமற்றும்அமைதிமுறையான, மக்களின்உரிமைகளை முதன்மைப்படுத்தும் சுதந்திரமான தேர்தலாக அமையவேண்டும். வீழ்ச்சி கண்டுள்ள தேசத்தை, வங்குரோத்தடைந்துள்ள நாட்டை மீட்க அனைவரும் கைகோர்த்து செயற்பட வேண்டும். புதிய நாடாளுமன்றம் அவ்வாறான புதிய கலாசாரத்தை உருவாக்கவேண்டும்.

கடந்த அரசாங்கத்தில் நாம் எதிர்க்கட்சியாக இருந்தோம். ஆனால், ஒருபோதும் எதிரிக்கட்சியாக இருக்கவில்லை. அரசாங்கத்தின் நல்ல திட்டங்களை முழுமையாக ஏற்றுக்கொண்டோம். எனவே, அந்தக் கலாசாரத்தை அனைவரிடமும் எதிர்பார்க்கின்றோம். நாமும் தொடர வேண்டும் - என்றார். (ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சனநாயகத் தமிழரசுக் கூட்டமைப்பில் போட்டியிடும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் அத்தியடி கணபதி கலாசார மண்டபத்தில் தனது வாக்கைச் செலுத்தினார்.



அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயத்தில் தனது வாக்கைச் செலுத்தினார்.



ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் அங்கஜன் இராமநாதன், அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதய வித்தியாலயத்தில் தனது வாக்கைச் செலுத்தினார்.



சுயேச்சையாகப் போட்டியிடும் வேட்பாளர் சட்டத்தரணி ஈ.எஸ்.பி.என்.கமலரூபன் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் தனது வாக்கைச் செலுத்தினார்.



தமிழ் மக்கள் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் கொக்குவில் மேற்கு சி.சி.த.க.பாடசாலையில் தனது வாக்கைச் செலுத்தினார்.



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ராஜகிரிய, சந்திரலோக தஹம் பாடசாலை கட்டடத்தில் அமைந்துள்ள வாக்களிப்பு நிலையத்தில் வைத்து தனது வாக்கைச் செலுத்தினார்.



அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரான செல்வராசா கஜேந்திரன் யாழ். துன்னாலை காசிநாதர் வித்தியாலயத்தில் தனது வாக்கைச் செலுத்தினார். (ம-66)



நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் வேட்பாளரான சிறீதரன் கிளிநொச்சியில் தனது வாக்கைச் செலுத்தினார். (ம-20)



ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணியின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தனது வாக்கைச் செலுத்தினார். (ம-20)



ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியின் சங்குச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த்தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் யாழ். வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியில் தனது வாக்கைச் செலுத்தினார். (ம-66)



நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்றுக் காலை தனது வாக்கைச் செலுத்தியுள்ளார். (ம-110)




அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளருமான ரிஷாத் பதியுதீன், மன்னார், தாராபுரம் அல் மினா மகா வித்தியாலயத்தில் தனது வாக்கைச் செலுத்தினார். (ம-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர்ப் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரால் தையல் தொழில் முயற்சியில் ஈடுபடும் பெண்களுக்கான திறன்விருத்திப் பயிற்சிநெறி ஜே/94 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அரியாலை மத்தி வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது. (ச-25-66)



கிளிநொச்சி முருகானந்தா கல்லூரிக்கு கிளிநொச்சி றோட்டறிக் கழகத்தின் அனுசரணையில் சுவிஸ் விஜய் பவுண்டேசன் அமைப்பினரின் ஏற்பாட்டில் பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாணவர்களுக்கு பொருள்கள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வில் வேரவில் பிரதேச மாணவர்கள் உட்பட 10 மாணவர்களுக்கு ஈருருளிகளும், 50 மாணவர்களுக்கு புத்தகப்பைகளும், எழுது பொருள்களும் வழங்கப்பட்டன. (எ-ரி-13)

# புடினை விமர்சித்த நபர் சடலமாக மீட்கப்பட்டார்

உக்ரைனுக்கு எதிரான ரஷ்யப் படையெடுப்பைக் கண்டித்து, அதிபர் விளாடிமிர் புடினை கடுமையாக விமர்சித்த உலகப் பிரபல சமையற்காரரான அலெக்ஸி ஜிமின் மர்மமான முறையில் கொல்லப்பட்டுள்ளார்.
2014ஆம் ஆண்டு ரஷ்ய அதிபர் புடின் கிரீமிய தலைவர்களுடன் இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதை அலெக்ஸி ஜிமின் மிகக் கடுமையாக விமர்சித்ததுடன், ரஷ்யாவை விட்டு வெளியேறினார். அதைத் தொடர்ந்து பிரிட்டனில் வசித்துவந்த அவர் ரஷ்யாவுக்கு எதிராகக் கடுமையான கருத்துகளை முன்வைத்து வந்தார்.
உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் படையெடுப்பையும் அவர் கடுமையாக விமர்சித்த நிலையிலேயே, சேர்பியாவில் உள்ள ஹோட்டலில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பிரிட்டனில் இருந்து நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காக சேர்பியாவுக்குச் சென்றவேளையில் அவர் மர்மமான முறையில் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



கணவனை இழந்த இளம்பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், போர்ச்சூழலில் பாதிக்கப்பட்டவர்கள் எனத் தெரிவுசெய்யப்பட்ட 31 குடும்பங்களுக்கு கைதடி வளர்மதியின் உலக உறவுகள் அமைப்பால் உலருணவுப் பொருள்கள் முதற்கட்டமாக வழங்கிவைக்கப்பட்டன. (ச-159)



## திருக்கல்யாணம்

யாழ்ப்பாணம்,நவ.15
சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பு சந்தன முதலிச்சிபுலம் முருகமூர்த்தி கோவிலில் கந்தசஷ்டி உற்சவத்தின் திருக்கல்யாணம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. (ச-25,9)



நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் சிறுகைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு மற்றும் மனிதவள அபிவிருத்திப் பிரிவு ஆகியவற்றின் ஏற்பாட்டில் மீன்பிடிப் படகுகளின் இயந்திரங்களை பழுதுபார்க்கும் பயிற்சிநெறி பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-25-9)

## வற்றாப்பளை ம.வி. தேசியத்தில் சாதனை

யாழ்ப்பாணம்,நவ.15
தேசியமட்ட அகில இலங்கை பரதநாட்டியப் போட்டியில் முல்லைத்தீவு வலயத்திலிருந்து கலந்து கொண்ட வற்றாப்பளை மகா வித்தியாலயத்தின் கொற்றவையாடல், மல்லாடல் ஆகிய இரண்டு நிகழ்ச்சிகளும் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளன. (ச)





## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.15
நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக குழுக்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான முன்னாயத்தக் கலந்துரையாடல் மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு இடம்பெற்றது. (ரி-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிப்பில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை

## ஒரேயொரு கட்சி விதிவிலக்கு மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு



கொழும்பு, நவ. 15

**நாடாளுமன்றத் தேர்தலின்போது ஒரேயொரு கட்சியைத் தவிர ஏனைய கட்சிகளின் ஆதரவாளர்கள் ஆர்வம் செலுத்தவில்லை என்பது எமது நடமாடும் கண்காணிப்பின் போது அவதானிக்கப்பட்டது. இது மிகவும் துரதிர்ஷ்டவசமான தாகும் என்று வீவ் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் இம்முறை தேர்தலில் மக்கள் ஆர்வம் காண்பித்துள்ள வீதம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. எம்மால் முன்னெடுக்கப்பட்ட நடமாடும் கண்காணிப்பின்போது ஒரேயொரு கட்சியின் ஆதரவாளர்கள் மாத்திரமே ஆர்வத்துடன் வாக்களிப்பதை அவதானிக்க முடிந்தது. ஏனைய கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் அதனை அவதானிக்க முடியவில்லை. இது துரதிர்ஷ்டவசமான விடயமாகும்.

தேர்தல் சட்டமீறல்கள் இடம்பெற்றுள்ளபோதிலும், பெரியளவிலான வன்முறைகள் எவையும் பதிவாகவில்லை. ஆனால் சில பிரதேசங்களில் கட்சி அலுவலகங்கள் நீக்கப்படாமலிருப்பதையும் அவதானிக்க முடிந்தது. கடந்த தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் அமைதியானதும் சுதந்திரமானதுமான முறையில் இம்முறை தேர்தல் இடம்பெற்றுள்ளது.

225 பேரும் வேண்டாம் என்ற கோஷத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. கடந்த முறையும் நான் அதனை எதிர்த்திருந்தேன். ஆனால் எமக்கு தவறானவர் எனத் தோன்றுபவர்களை மீண்டும் தெரிவு செய்யாமல் இருப்பதற்கான அதிகாரம் எமக்கிருக்கிறது - என்றார். (ம-இ)


**விற்பனைக்கு**

சுப்பர் ஏஸ் அலுமினிய பொடி. பட்டா லொறி விற்பனைக்குண்டு.

**077 772 2215**

**சாரதி தேவை**

கொழும்பு மற்றும் யாழ்நகரில் இயங்கிவரும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு கனரக வாகன சாரதி தேவை. முன் அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது. (யாழ் - கொழும்பு)

தொடர்பு: **076 690 8987**

(cs.56671) (N-1)


## மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 04 . 1934 — மறைவு 14 . 11 . 2024

### செல்லப்பா விசாலாட்சி

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா விசாலாட்சி அவர்கள் நேற்று (14.11.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற செல்லப்பாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, சிவபாக்கியம் (சாமியம்மா), பராசக்தி, புனிதவதி, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான முருகேசு, கந்தையா, மனோன்மணி, சரவணமுத்து (கிளாக்கர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், தில்லைநாதன், விஜயலட்சுமி, விமலகுமாரி, விக்கினேஸ்வரி, வசந்தகுமாரி, ஜெயக்குமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், மாங்களநாயகி, சிவகுமாரன், தவராசா, ஜெயபாலன், அருள்மாறன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மதிகரன், றஜீவன், றதீஸ் (பொறியியலாளர்- கொழும்பு), வினேஸ் (கிராம அலுவலர் அனலைதீவு), வினோகா (வலயக்கல்வி அலுவலகம்- வேலணை), குணேஸ், ஜிந்துஜா, தேனுஜா (போதனாசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), கஜமுகன், தேனுஜன், அபிஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஹர்ணி, மகிழன், கிசானன், வர்ணிகா, மதுனிகா, அகனிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் புளியங்கூடலில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (15.11.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைகளுக்காக புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 09 . 1932 — மறைவு 14 . 11 . 2024

### இளையதம்பி இராசையா

மீசாலை மேற்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இராசையா அவர்கள் நேற்று (14.11.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருளம்பலம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தனபாலசிங்கம், தங்கம்மா, சோமசுந்தரம், சிவக்கொழுந்து மற்றும் நல்லம்மா, சரஸ்வதி, விஜயரத்னம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சச்சிதானந்தன் (ஜேர்மனி), கருணாகரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற ரோகினி மற்றும் நித்தியானந்தன் (ஆசிரியர் யா/வேம்படி மகளிர் கல்லூரி), அருளானந்தம் (கனடா), சுபாதினி (விரிவுரையாளர் - யா/ தேசிய கல்வியியல் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரிலதா (ஜேர்மனி), நந்தினி (ஜேர்மனி) சிவராசா, நந்தறூபி (ஆசிரியர், யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்), கிருபாளினி (கனடா) சத்தியேந்திரம்பிள்ளை (உப பீடாதிபதி யா/ தேசிய கல்வியியல் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரதீஸ், தீபகன், பிரகாஷ், அஸ்வினி, பிரதீப், பிரியா, சங்கவி, சாரங்கா, தர்சன், சங்கீதா, கலைகஸ்ரிபன், சகானா, கருணாகரன், மதுசன், பிரியங்கா, மிதுலா, சௌமியா, சரன், சஸ்மிதன், சஸ்மிதா ஆகியோரின் பாசமிகு பேரனும், அஸ்லி, அஷ்வந்த், ஆஜிசன், அபிசன், ஆஜிசா, அஸ்மிரா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2024) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.30 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
**0777 112098 - நித்தியானந்தன்**
**077 999 2304 - சுபாதினி**

## மரண அறிவித்தல்



தோற்றம் 29 . 07 . 1991 — மறைவு 14 . 11 . 2024

### தங்கராஜா சுபாஸ்

**(பொலிஸ் உத்தியோகத்தர் - கோப்பாய் பொலிஸ் நிலையம்)**

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், அராலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராஜா சுபாஸ் அவர்கள் நேற்று (14.11.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராஜா - குமாரதேவி தம்பதியரின் அன்பு மகனும், கோபாலசிங்கம் - தேவராணி தம்பதியரின் அன்பு மருமகனும், தாரணி (ஆங்கில ஆசிரியர்) அவர்களின் அன்புக் கணவரும், சியாம், அபர்ணா ஆகியோரின் அன்புச் சகோதரரும், யாட்ஷாவின் அன்பு மாமனாரும், யுகேந்திரன், சுபத்திரா, பிரதீபா, தினேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரகலநாதன், நிறஞ்சன் ஆகியோரின் அன்புச் சகலனும், அஸ்வினி, அட்ஷரா, யுகிஷரன், கபிஷரா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 1845) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டலாபிஷேகமும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், நவ, 15 காரைநகர் அல்வின் வீதி அருள் மிகு ஸ்ரீ காமாட்சி வைரவர் ஆலயமண்டலாபிஷேகப் பெருவிழாவின் ஆரம்ப நிகழ்வாக வைரப் பெருமானுக்கு 108 சங்காபிஷேகம் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு இடம் பெற்றுத் தொடர்ந்து மண்டலாபிஷேக நூல் வெளியிடப்படவுள்ளது. நூலின் வெளியீட்டுரையை மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் நிகழ்த்தவுள்ளார். நூலை ஆலய தர்மகர்த்தா எஸ்.தேவராசா வெளியிட்டு வைக்கவுள்ளார். (ச-25)

# கூட்டுறவு பணியாளர்களுக்கு விடுமுறை

யாழ்., நவ.15 பொதுத்தேர்தலில் கூட்டுறவுப் பணியாளர்கள் வாக்களிப்பதற்காக நேற்று வியாழக்கிழமை அரைநாள் விடுமுறை வழங்கப்பட்டது. சில கூட்டுறவுச் சங்கங்கள் பணியாளர்களுக்கு முழுநாளும் விடுமுறை வழங்கியுள்ளன. இயக்குநர் சபையின் அனுமதியுடன் பணியாளர்கள் வாக்களிக்க வசதியாக இந்த சிறப்பு விடுமுறையை குடாநாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புகள் வழங்கின என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி-17)

## மகளிருக்கான பயிற்சிகள்

கிழமை நாள் மற்றும் சனி ஞாயிறு
புதிய பிரிவுகளுக்கு அனுமதிகள் வழங்கப்படுகின்றன!!!

* ICING (8 வகை) * CAKES (7 வகை) * COOKERY
* HAIR DRESSING * BEAUTICIAN COURSES

கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தலாம்

**தையல் பயிற்சிகள்**

இடம் :- யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி,
(யாழ் போதனா வைத்தியசாலை பின் வீதி,)

தொடர்புகளுக்கு :-
077 711 0383
074 217 0383
(Whatsapp No)

(cs.437033) (N-1)

## நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம். பதவி வெற்றிடம்

நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளதால் தகைமையுள்ள விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் சகல விபரங்களும் உள்ளடக்கப்பட்டதாக சுயமாகத் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தினை தலைவர். பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம். நெடுங்கேணி என்னும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாக 29.11.2024ம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். வயதெல்லை 18-45 வரை கூட்டுறவு சேவையிலுள்ளோருக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது என்பதுடன் கூட்டுறவு நிறுவனத்தில் கடமையாற்றுவோர் விண்ணப்பிக்கும் போது நிறுவனத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

1) பதவி :- கிராமிய வங்கி முகாமையாளர்:- 205/12
பதவி வெற்றிடம் :- 01
சம்பள அளவுத்திட்டம் - 18820.00 –170x10 – 185x10-22370.00 ம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைய இதர படிகளும் வழங்கப்படும்.

**கல்வித் தகைமை:-**

அ) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்ட பதவியில் கிராமிய வங்கி பிரிவு பதவியொன்றில் ஆகக் குறைந்தது இரண்டு (02) ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கிராமிய வங்கிப் பிரிவு பதவியொன்றில் ஆகக் குறைந்தது நான்கு (04) ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் நிதிச் செயற்பாட்டுடன் தொடர்புடைய கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

தலைவர்.
15.11.2024. பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்.
தொடர்பு: 024 222 8552

(cr.437005) (N-1)

## கண்ணீர் அஞ்சலி



எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் **திருமதி சுபாதினி சத்தியேந்திரம்பிள்ளை** அவர்களின் பாசமிகு தந்தையாரும். உப பீடாதிபதி **திரு.S.R. சத்தியேந்திரம்பிள்ளை** அவர்களின் பாசமிகு மாமனாருமாகிய

### இளையதம்பி இராசையா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிறப்பு 13.09.1932 இறப்பு 14.11.2024

கல்லூரிச் சமூகம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

(cs 56668) (N-1)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 28 • 08 • 1951



மறைவு 09 • 11 • 2022

### நயினார் சிலுவைச்சிஅம்மா

(சிலுவேஸ்திரி)

திதி: 15.11.2024

கண்ணிமைத்து விழிக்கவில்லை
ஈராண்டு சென்று விட்டதம்மா
ஒரு நொடிப்பொழுதும் அழியவில்லை
உங்கள் அன்பான உள்ளம் எம்மை விட்டு....

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs.1842) (N-1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாய் மடியில் 12 • 02 • 1946



இறைவன் அடியில் 28 • 10 • 2023

### அமரர் நாகலிங்கம் கணேசு

(ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்)

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே!

ஓராண்டு கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்துவிட்டது உம் முகம்
காவியமாய் வாழ்ந்தீர்கள்
காலமெல்லாம் நினைத்திருப்போம்!

கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்
ஆண்டவன் காலடியில்
உம் ஆத்மா சாந்திடைய
எம் கண்ணீர் துளிகளை
காணிக்கையாக்குகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

முதலியார் கனகசபை வீதி,
மானிப்பாய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 1 ஆம் ஆண்டு நீங்கா நினைவுகள்



பிறப்பு 23.08.1922 இறப்பு 15.11.2023

அமரர்

### மனுவேற்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

(ஆனந்தா அச்சகம்)

"அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்"

எங்கள் இதயங்களில் என்றும் குடியிருக்கும் அன்புத் தந்தையே
உமது பாசமழையும், எண்ணங்களும் எந்நாளும்
எம் மனதில் என்றும் தீபமாக இருக்கின்றது.
உங்கள் ஆன்மா ஆண்டவரில் இளைப்பாற
வேண்டுகின்றோம்.

(cs 56669) (N-1) குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் 2024



## திருகோணமலை மாவட்டம்

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 87,031 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 530,58 |
| தமிழரசுக் கட்சி | 34,168 |

## நாவலப்பிட்டிய தொகுதி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 37,376 |
| புதிய ஜ.முன்னணி | 12,696 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 12,213 |

## கொழும்பு மத்தி தொகுதி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 39,160 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 27,347 |
| புதிய ஜ. முன்னணி | 3,612 |
| பொதுஜன பெரமுன | 923 |

## கம்பொல தொகுதி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 38,456 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 16,781 |
| புதிய ஜ. முன்னணி | 10,290 |
| பொதுஜன பெரமுன | 1,105 |

## நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பு வீதம்

கொழும்பு, நவ,15

நேற்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் மாவட்ட ரீதியாக பதிவான வாக்களிப்பு வீதம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| கொழும்பு | - | 65% |
| நுவரெலியா | - | 68% |
| குருநாகல் | - | 64% |
| மட்டக்களப்பு | - | 61% |
| மாத்தறை | - | 64% |
| புத்தளம் | - | 56% |
| அநுராதபுரம் | - | 65% |
| பதுளை | - | 66% |
| மன்னார் | - | 70% |
| திருகோணமலை | - | 67% |
| முல்லைத்தீவு | - | 63% |
| பொலனறுவை | - | 65% |
| இரத்தினபுரி | - | 65% |
| காலி | - | 64% |
| யாழ்ப்பாணம் | - | 59% |
| அம்பாந்தோட்டை | - | 60% |
| மாத்தளை | - | 67% |
| கேகாலை | - | 65% |
| மொனராகலை | - | 63% |
| வவுனியா | - | 65% |
| கிளிநொச்சி | - | 62% |
| கண்டி | - | 62% |
| களுத்துறை | - | 64% |
| அம்பாறை | - | 62 % |
| கம்பஹா | - | 66% |

## கோப்பாய்த் தொகுதி

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 9,570 |
| தமிழரசுக் கட்சி | 4,047 |
| ஐ. தமிழ்த் தேசியக் கூட்டணி | 3,025 |
| தமிழ்க் காங்கிரஸ் | 2,679 |
| சுயேச்சை – 17 | 2,743 |

# போகோ ஹராமின் மீது இராணுவத்தினர் தாக்குதல்

நியூயோர்க், நவ.15

மத்திய ஆபிரிக்க நாடான சாட் நாட்டில் போகோ ஹராம் பயங்கரவாதிகள் 96 பேர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர். கடந்த சனிக்கிழமை லேக் சாட் பிராந்தியத்தில் இராணுவ வீரர்கள் 17 பேரை ஹராம் பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக பயங்கரவாதிகள் 96 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று இராணுவத்தினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த மோதலில் 17 இராணுவத்தினரும் உயிரிழந்துள்ளனர்.

(எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண மாவட்ட தபால் மூல வாக்களிப்பு

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 9,066 |
| தமிழரசுக் கட்சி | 2,582 |
| தமிழ்க் காங்கிரஸ் | 1,612 |
| ஈ.பி.டி.பி. | 1,361 |
| ஜ. தமிழ்த் தேசியக் கூட்டணி | 1,124 |
| தமிழ் மக்கள் கூட்டணி | 1,076 |
| சுயேச்சை - 17 | 1,067 |

## வன்னி மாவட்ட தபால் மூல வாக்களிப்பு

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | 4,371 |
| தமிழரசுக் கட்சி | 2,349 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1,825 |
| ஜ. தமிழ்த் தேசியக் கூட்டணி | 1,399 |
| தமிழ்க் காங்கிரஸ் | 502 |

## கனடா - இந்தியா இடையே அதிகரிக்கின்றது விரிசல்

*றொறன்ரோ, நவ.15*

கனடாவின் காலிஸ்தான் அமைப்பின் தலைவர் நிஜ்ஜார் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இந்தியாவுக்கு தொடர்புள்ளது என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியதை அடுத்து, அந்தவிடயம் இரு நாடுகளுக்கும் இடையில் விரிசலை ஏற்படுத்தியிருந்தது.

அதன் விளைவாக சில வாரங்களுக்கு முன்பு கனடாவின் ப்ராம்ப்டன் நகரிலுள்ள இந்துக் கோவில் சேதப்படுத்தப்பட்டதுடன், பக்தர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இந்தியாவை பழிவாங்கும் எண்ணத்துடன் நடத்தப்பட்ட இந்தச் சம்பவத்துக்குப் பலரும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின்பின்னர் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி இந்திய தூதரகம் தனது நிகழ்ச்சிகளை இரத்துச் செய்துள்ளது. (எ-இ)

### நாதம்...

முன்னரும், ரணில் அரசாங்கத்திலும் அமைச்சுப் பதவிகளை வகித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தவிசாளர் டக்ளஸ் தேவானந்தா இம்முறை முதல்முறையாக நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்துள்ளார். (அ-ம-26)

### வடக்கையும்...

இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் நேற்று நடைபெற்றது. பொலிஸார், இராணுவத்தினர், கலகம் அடக்கும் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் என அனைத்துத் தரப்பினரும் குவிக்கப்பட்டு கடும் பாதுகாப்புக்கு மத்தியில் வாக்குகள் எண்ணப்பட்டு அறிவிக்கப்பட்டு வருகின்றன. இலங்கையின் வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி மற்றும் பொது ஜன பெரமுன ஆகியவற்றை விடவும், வேறொரு கட்சி முதல்முறையாக மூன்றிலிரண்டு அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பதை ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி உறுதிசெய்து வருகின்றது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் 6 ஆசனங்களில் தேசிய மக்கள் சக்தி மூன்று ஆசனங்களைப் பெறும் என்று இன்று அதிகாலை வரையிலான தரவுகள் மற்றும் கணிப்புக்களின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய மூன்று ஆசனங்களில் தமிழரசுக் கட்சி, சுயேச்சைக் குழு - 17 மற்றும் தமிழ்க் காங்கிரஸ் என்பன தலா ஒவ்வொரு ஆசனங்களைப் பெறவுள்ளன.

வாக்குகள் எண்ணப்பட்டு இன்று நண்பகலுக்குப் பின்னரே உத்தியோகபூர்வ முடிவுகள் அனைத்தும் வெளிவருவதற்குக் கூடுதல் சாத்தியங்கள் உள்ளன. எனினும், இதுவரை எண்ணப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ள வாக்குகளின் அடிப்படையில் ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மூன்றிலிரண்டு அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைப்பதை உறுதிசெய்து வருகின்றது. (அ-ம-26)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை
சுவாமியார் வீதியில்
3 பரப்புக் காணியுடனான
வீடு விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்பு கொள்ளவேண்டாம்)
தொடர்புக்கு:- 077 614 6434
(CS/56670) J-1

**சிறுநீரகம் தேவை**

சிறுநீரகம் செயிழந்த
ஒருவருக்கு O இரத்தவகையைச்
சேர்ந்த சிறுநீரகம்
அவசரமாகத் தேவை.
45 வயதிற்குட்பட்டவர்கள்
விரும்பத்தக்கது.
077 540 6732, 077 723 8937
(cs.56663) (N-1)

### வாக்களிப்பு...

தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 78 சதவீதமான வாக்குகள் பதிவாகியிருந்தன. ஜனாதிபதித் தேர்தலின்போது 74 சதவீதமான வாக்குகள் பதிவாகியிருந்தன. இவ்வாறிருக்கையில் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் மிகக் குறைந்தளவு வாக்குகள் பதிவாகியுள்ளமையானது மக்களின் விரக்தி நிலையை வெளிப்படுத்துவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம-110)

### தேர்தல்...

(வயது-34) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் நாடாளுமன்றத் தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த அவர், மலசலகூடத்திற்குச் சென்ற பின்னர் பல மணி நேரம் திருப்பி வராததையடுத்து கதவைத் திறந்து பார்த்தபோது உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-20-66-26)

### எதிர்வரும்...

பின்னர் நாட்டில் போராட்டங்கள் மற்றும் கலவரங்கள் மேற்கொள்ளப்படச் சாத்தியங்கள் அதிகம் உள்ளன என்று எச்சரிக்கப்படும் நிலையிலேயே தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து வரும் ஒருவாரத்துக்குப் போராட்டங்கள் நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாடளாவிய ரீதியில் அதிகரிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்ந்தும் பேணப்படுகின்றன. உளவுத் துறையால் எச்சரிக்கப்பட்ட சில இடங்களில் சிறப்புக் கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம)

### வலுவான...

தாவது:-

நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு குறிப்பிடத்தக்க பிரதிநிதித்துவம் கிடைக்கும். அனைத்து மாகாணங்களிலும் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சட்டமூலங்களை நிறைவேற்றுவதற்கு ஐக்கியப்பட்ட அரசியல் கலாசாரம் அவசியம். தேசிய மக்கள் சக்தி அமைதியான தேர்தல் பரப்புரைகளை உறுதி செய்துள்ளது. இது எதிர்காலத் தேர்தல்களின் தராதரத்துக்கான உதாரணமாக அமையும் - என்றார். (அ-ம-இ)

### ஹெலிகொப்டரில்...

வாக்குப் பெட்டிகளைக் கொண்டு வந்த ஹெலிகொப்டர் மாலை 5.25 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் தரையிறங்கியது.

நெடுந்தீவிலிருந்து வருகை தந்த சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களையும், விமானிகளையும் யாழ்.மாவட்டப் பதில் மாவட்டச் செயலரும், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன், மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் மற்றும் வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏ.ஜெ.ஹாலிங்க ஜெயசிங்க ஆகியோர் வரவேற்றனர். (அ-ம-26-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.11. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.